Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 13 (27 - 05 - 1991) திங்கட்கிழமை ஓசை: 98

## பல்கலைக்கழக அனுமதி 100 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

1991 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறுபவர்களின் தொகையினை நூற்றுக்கு நூறு வீதம் அதிகரிப்பதற்கு கல்வி, உயர்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது என அறிவிக்கப் பட்டுள்ளது. தற்போதுள்ள பல்கலைக் கழகங்களுடன் ஒன்பது பல்கலைக்கழக நிறுவனங்கள் அமைக்கப்படுவதால் இவ் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் நிர்வாக எல்லைகளை மாற்றுவதன் மூலம்

# தமிழர் விகிதாசாரம் குறைக்க சிறிலங்காவின் புதிய திட்டம்

(மட்டக்களப்பு)

நிர்வாக எல்லைகளை மாற்றுவதன் மூலம் தமிழ்க் கிராமங்களை சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டங்களுடன் இணைப்பதன் மூலம் கிழக்கில் தமிழ்மக்களின் இன விகிதாசாரத்தைக் குறைவடையச் செய்யும் நடவடிக்கையில் சத்தம் சந்தடியில்லாமல் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இதன் ஒருகட்ட நடவடிக்கையாக;

மட்டக்களப்பு மாவட்டத்து நிலங்களைப் பிரித்து எடுத்து பொலநறுவ மாவட்டத்துடன் இணைக்கும் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கான பூர்வாங்க ஏற்பாடாக அரசாங்கம் மட்டக்களப்பில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் நிர்வாக எல்லைகளைத் திருத்தி அமைத்து வருகிறது; சத்தம் சந்தடியில்லாமல் தமிழ்க் கிராமங்கள் துண்டாடப்பட்டு அவற்றின் பலம் குறைக்கப்படுகிறது;

ஓட்டமாவடி ஒரு முஸ்லிம் கிராமம் இது 15 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவாகமாற்றப்பட்டுள்ளது. இது மேலும் 22 கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட உதவி அரசாங்கஅதிபர் பிரிவாக மாற்றி அமைக்கப்படும். இதனால் வாகனேரி, பூனாணைக்குளங்கள் தமிழ் உதவி அரசாங்க அதிபர்பிரிவிலிருந்து பிரித்தெடுக்கப்படவுள்ளன; வாழைச்சேனை கடதாசி ஆலை, அங்குள்ள ஆஸ்பத்திரி, புனாணை, வாழைச்சேனை புகையிரத நிலையங்களும் தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து எடுக்கப்படும். இந்தத் திட்டத்தினால் தமிழர் தமது கிராமங்களிலேயே சிறுபான்மையாக்கப்படுகின்றனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுவனில் ஷெல் தாக்கு; நேபாம் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

கட்டுவனில் நேற்று முன்தினம் அதிகாலை 3-05 மணியில் இருந்து 4-30 மணிவரை சிறிலங்கா இராணுவத்தினரால் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் முற்பகல் 11 - 30 மணியில் இருந்து இரண்டு மணிவரை ஷெல் தாக்குதலும், நேபாம் குண்டுத்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன

இத்தாக்குதல்களால் ஏற்பட்டசேதவிபரங்கள் கிடைக்கவில்லை.

## ஆனையிறவில் நீண்டநேரம் விமானக் குண்டுவீச்சு

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் பகல் முழுவதும் விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது;

நேற்று முன்தினம் காலை9 15 மணியில் இருந்து மாலை 3.05 மணிவரை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள், மூன்று ஹெலிகள், ஒரு அவ்ரோ விமானம் என்பன ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் தொடர்ச்சியான விமானத் தாக்குதலை மேற்கொண்டன

இதனைத் தொடர்ந்து இப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலால் ஏற்பட்ட சேதவிபரங்கள் கிடைக்கவில்லை;

## சர்வதேச மன்னிப்புச் சபைக் குழு

## அரச அனுமதியுடனேயே வடக்கு-கிழக்கு செல்லலாம்

(கொழும்பு)

இலங்கைக்கு அடுத்த மாதம் வரவிருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபைக் குழு அரசாங்கத்தின் அனுமதியுடனேயே வடக்குக் கிழக்குப் பகுதிக்குச் செல்லலாம் என சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இக் குழுவினர் மீது கட்டுப்பாடு எதுவும் விதிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்த பிரட்மன் வீரக்கோன் ஆனால் இக் குழுவினரின் பாதுகாப்பு இலங்கை அரசாங்கத்தின் கரங்களிலேயே உள்ளது என்பதால் அந்நேரசந்தர்ப்பசூழ் நிலையைப் பொறுத்து அவர்கள் வடக்குக் கிழக்கிற்கு செல் (4 ஆம் பக்கம் பார்க்க)

## போரை நிறுத்த ஐ.நா. கோரிக்கை

(நியூயோர்க்)

எதியோப்பியாவில் நடைபெறும் உள்நாட்டுப்போரை உடனடியாக நிறுத்தும்படி போரில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் ஐ. நா. கேட்டுக்கொண்டுள்ளது.

## ராஜீவின் அஸ்தி தீன்மூர்த்தி பவனில்

(டில்லி)

ராஜீவ் காந்தியின் அஸ்தி சக்திஸ்தலில் இருந்து தீன்மூர்த்தி பவனுக்கு நேற்று எடுத்து வரப்பட்டு நாளை திரிவேணி சங்கமத்தில் கலக்கப்படவுள்ளது.

பல கலசங்களில் சேகரிக்கப்பட்ட அஸ்தி தீன்மூர்த்தி பவனில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின்னர் அலகாபாத்தில் உள்ள திரிவேணிசங்கமத்தில் கரைக்கப்படவுள்ளது.

## சாவகச்சேரி நகருக்கு மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகருக்கு மின்சாரம் கிடைத்து விட்டது. அங்கு உள்ள வர்த்தக நிலையங்களில் மின் விளக்குகள் இரவு பகலாக பிரகாசித்த வண்ணம் உள்ளன.

பிரத்தியேக மின் வழங்கி ஒன்றின் உதவியுடன் சாவகச்சேரி நகர் தற்போது ஒளியூட்டப்பட்டுள்ளது.

இந்த மின் வழங்கும் சேவைக்கு சாவகச்சேரி வர்த்தகர்கள் குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்தை வழங்கி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (லேர)

## இனப்பிரச்சினைக்கு 30 நாட்களுள் தீர்வுகாண தெரிவுக்குழு நியமிக்குக

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முப்பது நாட்களுக்குள் இணக்கமான தீர்வு ஒன்றினைக்காண பாராளுமன்ற அரசியல் கட்சிகளின் தெரிவுக் குழுவை நியமிக்குமாறு மக்கள் ஐக்கிய முன்னணி சிறிலங்கா அரசாங்கத்தைக் கேட்டுள்ளது;

மக்கள் ஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது பாரா (4ஆம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவிற்கே காங்கிரஸ் தலைமை - டைம்ஸ் ஒப் இந்தியா கணிப்பு

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராகும் வாய்ப்பு முன்னாள் மத்திய அமைச்சரான பி. வி. நரசிம்மராவுக்கு கிடைக்கலாமென டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை ஊகம் வெளியிட்டுள்ளது: 69 வயதான ஆந்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த பி. வி. நரசிம்மராவ் 1981 முதல் 1989 (4ஆம் பக்கம் பார்க்க)

## சங்கர் தயாள் சர்மா மறுப்பு

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பைத் தாம் ஏற்கப்போவதாக வெளிவந்த பத்திரிகைச் செய்திகளை இந்தியாவின் துணை ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாதிட்டவட்டமாக மறுத்துள்ளார்: அரசியலமைப்பு விதிகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் தாம் கட்சி விவகாரங்களில் ஈடுபடுவது மரபுகளுக்கு ஏற்புடையதல்ல என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## அரசியலில் ஈடுபடுமாறு தாயார் சோனியாவை பிரியங்கா வற்புறுத்து?

(லண்டன்)

சோனியா காந்தியை அரசியலில் ஈடுபடுமாறு மகள் பிரியங்கா கேட்டுக் கொண்டுள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் சண்டேரைம்ஸ் பத்திரிகையில் இடம் பெற்ற கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பிரியங்காவிற்கு தற்பொழுது 19 வயது எனவும் அவர் எம். பி. பதவிக்கு போட்டியிட இன்னும் ஆறு வருடங்கள் தேவை ஆகையால் அதுவரை காலமும் தாயார் அமேதித் தொகுதியில் போட்டியிட்டு அரசியலில் நேரு குடும்பத்தின் இடத்தைப் பாதுகாக்க வேண்டும் என அவர் தாயாரிடம் கேட்டுக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கிரசிற்கு தற்போது கூட்டுத் தலைமையே தேவை - என். ரீ. திவாரி.

(புதுடில்லி)

இந்திராகாங்கிரஸ் கட்சிக்கு இப்போதைய தேவை கூட்டுத் தலைமையே எனக் கூறியுள்ளார் திரு. நாராயன் தத் திவாரி உத்தரப்பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சராகவும் மத்திய அமைச்சராகவும் பதவி வகித்த திரு என். டி. திவாரி நேற்றுசெய்தியாளருக்கு வழங்கிய பேட்டியொன்றில் இவ்வாறு கூறினார்.

நீங்கள் கட்சித் தலைமையை ஏற்பீர்களா எனச் செய்தியாளர் கேட்ட போது (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**வகுப்புக்கள்**

Cake Icing Sugar Craft General Cookery, Hair Dressing புதிய பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன உடன் தொடர்பு கொள்ளவும்: Yogi Home Science Acadamy.
71 B, Nayanmar Road Off Kachcheri Nallur Road. Nallur Jaffna.
(R/1409)

**தவறிவிட்டது**

விஸ்வலிங்கம் குணபாலன் என்பவருடைய அடையாள அட்டை (இல 570083848V) 23.05.91 அன்று ஓமந்தைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் உண்டு. (R/1412)

**விற்பனைக்கு**

விளக்கெரிக்கவும், மருத்துவ தேவைக்கும் சுத்தமான வேப்பெண்ணெய். சிறந்த கிருமிநாசினியுங் கூட. அரைப் போத்தல் ஒன்று ரூபா. 45/- பேரம்பேசலுடன். மில்க்வைற் (B/2570)

**ஆங்கில வகுப்புக்கள்**

ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்குரிய பிரத்தியேக தனிப்பட்ட விசேட வகுப்புக்கள் இன்று முதல் ஆரம்பமாகின்றது தொடர்பு கொள்க: 4, பிள்ளையார் ஒழுங்கை திருநெல்வேலி. (B/2585)

**பெற்றுக் கொள்ளவும்**

நல்லூர் கோயில் வீதியில் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த நேசன் என்பவரால் 'பேர்ஸ்' ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

# தேவிலால் மாட்டுப்பண்ணை அமைக்க முயற்சி

இந்தியாவின் பிரதிப் பிரதமர் தேவிலால் தமது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தின் வளவின் ஒரு பகுதியில் மாட்டுப்பண்ணை அமைக்க முயன்றதை அடுத்து அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

மாட்டுப் பண்ணையை அமைப்பதன் மூலமாக சுற்றாடல் அசுத்தப் பிரச்சினைகளை தேவிலால் உருவாக்குகிறார் என்று காரணம் காட்டி அவரை வெளியேறுமாறு பிரதமர் சந்திரசேகருக்கு ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் கடிதம் எழுதியிருப்பதாகவும் அந்த வாசஸ்தலம் விவசாயப் பண்ணை அமைக்கும் நோக்கங்களுக்கானதல்ல என்றும் அக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாகவும் இந்தியன் எக்ஸ்பிரஸ் குறிப்பிட்டுள்ளது.

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

துளிராய் 22 - 8 - 1946



சருகாய் 27 - 5 - 1984

### திரு. கந்தப்பு ஸர்பன தேவராஜா

மோட்டார் வண்டியும் கிளம்பியது
எருமை வாகனமும் கிளப்பியது
புத்தூர் பாதையில் சீறியது
மின்னல் வேகத்தில் பறந்தது
சிறு கல்லுடன் தான் மோதியது
உடன் அறிவு பறந்து ஓடியது
நான்கு நாளில் உயிரும் பிரிந்தது
ஏழு ஆண்டுகளும் சென்று மறைந்தது

உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

"ஜெயமகால்"
இல. 7 - ம்குளி ஒழுங்கை
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்
(B/2515)

## நினைவு கூருகின்றோம்

### 1991 - 05 - 27

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் அநுராதபுரம் - புத்தளம் வீதியில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கையில் தடுத்து நிறுத்தப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்ட

**இரண்டு பொதுமக்கள்**

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது தொண்டமனாற்றில் நடந்த நேரடி மோதலின் போது வீரமரணமடைந்த

**தாசன்** (இராசையா உதயகுமார் - கற்கிலைமடு, ஒட்டிசுட்டான்)

வல்வெட்டித்துறையில் எறிகணைத் தாக்குதலினால் வீரமரணமடைந்த

**2ஆம் லெப். யூசி** (செல்லச்சாமி பிறேமானந்தன் - வல்வெட்டித்துறை)

கம்பர் மலையில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் படுகொலை செய்யப்பட்ட

**27 பொது மக்கள்**

இதேஆண்டு தெல்லிப்பளையில் அம்புலன்ஸ் மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் பலியான

**இரண்டு பொதுமக்கள்**

இதே ஆண்டு மண்டைதீவு முகாமிலிருந்து குருநகர் சென் ஜேம்ஸ் பாடசாலையினுள் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் படுகொலை செய்யப்பட்ட

**ஆறு பொதுமக்கள்**

இதே ஆண்டு வீரமரணமடைந்த

**ஹசன்** (முத்தையன்கட்டு)

1988 ஆம் ஆண்டு கச்சாயில் இந்தியப் படையினருடனான மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**புறொப்ளர்** (சிவயோகராசா குணராசா - கச்சாய் தெற்கு, கொடிகாமம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்;

: விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2563)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரவேங்கை

### 2ஆம் லெப். யூசி
### (செல்லச்சாமி பிறேமானந்தன்

தாயின் மடியில்: 10. 10. 1963

தமிழீழ மண்ணில்: 27. 05. 1987



வல்வையில் பிறந்து வல்வையில் வளர்ந்து
வல்வையில் மரணித்த மாணிக்க விளக்குக்காக
துப்பாக்கி ஏந்துவோம் வாருங்கள் — இனி
துன்பங்கள் எமக்கில்லை கூறுங்கள்
எப்போர்க்கும் யாமினி அஞ்சிடோம்
எம்மீழம் பெறும்வரை சோர்ந்திடோம்!

என்றுதினமும் இயம்பிய புலியே!
எங்கே மறைந்தாய் பட்டெனச் சொல்லிடு
கன்றதைத் தானிழந்து கதறும் தாய்க்குரல்
குன்றாத மணிவிளக்கே உனக்கு கேட்குதடா!

யுத்தம் எமக்களித்த யூசியே பெருவீரா!
உன்வழி தொடர்வோம்! தமிழீழம் மீட்போம்!
மொத்தமாய் வந்தாலும் பகைவரை புகவிடோம்
முடிவான தமிழீழம் வரும்வரை சோர்ந்திடோம்!

குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.

யூசி வீதி,
மானாங்கானை,
வல்வெட்டித்துறை.

(B/1402)

❊ சிந்தனைக்கு ❊

இலட்சியங்களே உலகின் அதிபர்கள்
—ஜோஸையா கில்பெர்ட் ஹாலண்ட்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 27.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ எண் 05

# அகிம்சைப் போதனைக்காக போர் நிறுத்தம்

சிறிலங்கா அரசாங்கம் அறிவித்த ஒருதலைப்பட்ச மூன்று நாள் யுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டனர். தமிழரின் நிரந்தர அமைதிக்கு வழிவகுக்காததும், குறுகிய மத நோக்கம் கொண்டதுமான இந்த யுத்த நிறுத்தத்தை தாம் நிராகரிப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருபத்தியாறாம் திகதி நள்ளிரவில் இருந்து இருபத்தி ஒன்பதாம் திகதி நள்ளிரவு வரை ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்த சிறிலங்கா அரசாங்கம் மகாசங்கத்தினரும், பௌத்த சங்கங்களும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படுவதாகவும், வெசாக் பண்டிகைக் காலம் கௌதம புத்தரின் அகிம்சையைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பினை அளிக்கின்றது என்பதை நினைவூட்டுவதற்காகவும் இந்த யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படுவதாகவும் அறிவித்துள்ளது.

அதாவது பௌத்தர்களுக்கு கௌதம புத்தரின் அகிம்சைப் போதனைகளை நினைவுபடுத்துவதற்காக யுத்த நிறுத்தம் ஒன்று தேவையாக இருக்கின்றது. இந்நிலையில் பௌத்தரின் போதனைகளின் வழியில் நாடு ஒழுகுகின்றது என அரசியல்வாதிகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிகின்றனர்.

இலங்கையைப் பொறுத்து பல இன மொழி பேசும் மக்கள் வாழும் நாடு. ஆனால், ஆட்சியாளர்கள் எப்பொழுதும் இது ஒரு பௌத்த சிங்கள நாடு என்ற நிலையில் இருந்து மாறவில்லை. இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பௌத்தத்திற்கு மாறிய சிங்கள அரசியல் தலைவர்கள் பலர் இங்கு இருந்துள்ளனர். இன்று இலங்கையில் நடக்கும் தமிழர் தேசிய இனப் போராட்டத்திற்கு பௌத்த சங்கத்தாரின் நடவடிக்கைகளும் முக்கிய காரணமாகும். அதாவது அகிம்சையைப் போதித்த மதமே யுத்தத்திற்கு வழி காட்டியுள்ளது. இந்த யுத்தத்தைக் கொண்டு நடத்துபவர்களும் இந்த மகாசங்கத்தினரே.

இம்முறை யுத்தம் ஆரம்பித்தபின் இந்துக்களின் சமய பண்டிகைகள் பலவும், கிறிஸ்தவரின் சமய பண்டிகைகள் பலவும், வந்து போயின. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் ஒரு தடவையேனும் யுத்த நிறுத்தத்தை அறிவிக்கவில்லை. அப்பண்டிகைகளைக் கருத்திலும் கொள்ளவில்லை. அதேவேளை தமிழரின் பண்டிகையான தீபாவளி அன்று பாரிய தாக்குதல் ஒன்றை பலாலியில் ஆரம்பித்தது ஆனால் தற்பொழுது பௌத்த சங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் பௌத்த சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி மேற்கொள்ளப்படும் முதலாவது தீர்மானம் அல்ல இது. இலங்கையின் அரசியல் வரலாறே பௌத்த சங்கத்தினரின் விருப்பு வெறுப்புகளுடனேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்தோடு தமிழர் தேசியப் பிரச்சினை முனைப்படைந்து இன்று ஆயுதப் போராட்டமாக மாறியமைக்கும் இந்த பௌத்தசங்கங்களின் பங்களிப்பு மிகவும் உயர்வானதாகும்.

இலங்கையின் அரசியலில் பௌத்த சங்கம் தமிழருக்கு எதிரான பல தீர்மானங்களின் பின்னணியில் இருந்துள்ளது சிலவற்றில் நேரடியாகவும் செயற்பட்டுள்ளது. 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வருவதில் பௌத்த சங்கம் குறிப்பிட்ட பங்காற்றியது. 1958 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தில் தமிழருக்கு எதிரான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டது. அதே ஆண்டு பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கெதிரான கண்டி யாத்திரையிலும் அவர்களின் பங்கு கணிசமானதாகும். அதேவேளை வடக்கு கிழக்கில் நடந்த சிங்களக்குடியேற்றங்களிலும் அவர்களின் பங்குமிக உயர்வானதாகும். அதாவது இலங்கை அரசியலில் எப்பொழுதும் சக்தி மிக்கதாகவே பௌத்த சங்கங்கள் இருந்து வந்துள்ளன.

தற்பொழுதும் அதன் நிலை வலுவாகவே உள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்தபோது யுத்த நிறுத்தத்தை விரும்பாத இராணுவத் தளபதிகள் யுத்தத்தைத் தொடர்வதற்கான வழிவகைகளை ஆராய மகாசங்கத்தினரையே நாடினர். அதாவது அகிம்சையைப் பின்பற்றும் மகாசங்கம் தற்பொழுது போருக்கான வழிவகைகளை ஆராய்வதிலும், போருக்குச் செல்லும் பௌத்தர்களுக்கு நல்லாசி வேண்டி பிரித் ஓதுவதிலும் தனது கவனத்தைச் செலுத்தி வருகின்றது.

இந்நிலையில் பௌத்தரின் தேவைக்காக அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தத்தால் தமிழருக்கு எதுவித இலாபமும் ஏற்படப் போவதில்லை. மறுவளமாக இந்தப் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்வதென்பது பௌத்த சிங்கள பேரினவாதத்தின் தேவையை தமிழர் பூர்த்தி செய்வதாக அமையுமே ஒழிய தமிழருக்கு எந்தவித இலாபத்தையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை.

உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில்

# சிறிலங்கா இராணுவம் ஓமந்தையிலிருந்து ஓடியது

## களத்தில் நின்ற தளபதியின் சிறப்புப்பேட்டி

(வவுனியா)

நாம் பலவீனமடைந்திருக்கிறோம் என தப்பான அர்த்தம் கொண்டு சிறிலங்கா இராணுவப்படையினர் இம்மாதம் முற்பகுதியில் வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளை ஆக்கிரமிப்பதற்கு முயற்சியெடுத்தனர். எதிரி எதிர்பார்க்காதவாறு நாம் கொடுத்த பலத்த அடியினால் இராணுவத்தின் நோக்கம் தோல்வி கண்டது.

மேற்கண்டவாறு, விடுதலைப் புலிகளின் இராணுவத் தளபதி ஒருவர் ஈழநாதத்திற்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

கடந்த 2 ஆம் திகதி வவுனியா மாவட்டத்தில் பல குண்டு வீச்சு விமானங்களின் உதவியுடன் மிகப் பெரியளவிலான யுத்தம் சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுக்கெதிராகத் தொடுத்தனர். பதினொரு தினங்கள் நீடித்த இந்த யுத்தத்தில் இராணுவம் பலத்த இழப்புகளுடன் தம் எண்ணத்தை கை விட்டு ஓட்டமெடுத்தமை தெரிந்ததே.

இந்த யுத்தம் பற்றி, மேற்குறிப்பிட்ட புலிகளின் தளபதி ஈழநாதம் வவுனியா நிருபரிடம் குறிப்பிடும் போது, எமது கட்டுப்பாட்டில் உள்ளதும் தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியுமான ஓமந்தை பிரதேசத்தை ஆக்கிரமித்து தம் வசப்படுத்த நினைத்த இராணுவம் இறுதியில் தம் உயிர் மிஞ்சினால் போதும் என்ற நோக்குடன், எமது பலத்த தாக்குதலை எதிர் கொள்ள முடியா வண்ணம் ஓட்டமெடுத்தது.

குறிப்பிட்ட தினம் ஓமந்தைக்கு இராணுவம் வரும் வரை, அப்பகுதிக்கு எதிராக சிறு சிறு தாக்குதல்களையே தொடுத்தோம். இந்த எமது தாக்குதல்களை இராணுவம், எமது பலவீனமாகக் கருதி விட்டது. நாம் இராணுவத்தை முற்று முழுதாக எதிர் கொள்வதற்கு சாதகமாக சூழலை எதிர் நோக்கிக் கொண்டிருந்ததை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இது எமது இராணுவ யுத்தி என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்தப் பதினொரு தினங்கள் இடம் பெற்ற யுத்தத்தில், குண்டு வீச்சு விமானங்களிலிருந்து 55 கிலோ கிராம் குண்டு சுமார் இரு நூற்றுக்கு அதிகமாக பிரயோகிக்கப்பட்டன; பீப்பா குண்டும் அதே அளவில் பிரயோகிக்கப் பட்டன.

நீண்ட நாள் இடம்பெற்ற இந்த மோதலில் கடைசி இரு தினங்கள் இராணுவத்தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டன என்று குறிப்பிட்ட அவர், வீரமரணமடைந்த இருபத்தைந்து போராளிகளின் தியாகத்தால் தான் இராணுவம் முன்னேறி வந்த பகுதிகள் மீண்டும் எமது கட்டுப்பாட்டில் வந்தன; எமது போராளிகளின் தியாக உணர்வினால் தமிழ் மக்கள் அப்பகுதியில் சுதந்திரமாக வாழுகின்றனர் என்றார்.

இந்த யுத்தத்தில் சுமார் எழுபத்தைந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் நூற்றி ஐம்பதிற்கு அதிகமான இராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார் (இ)

வட பிராந்திய மீன்பிடி

# பயிற்சிப் பாடசாலைக்கு ஒரு கோடி ரூபா நட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை, இந்திய இராணுவ தாக்குதல்களாலும் திருட்டுச் சம்பவங்களாலும் வட பிராந்திய மீன் பிடிப் பயிற்சிப் பாடசாலைக்கு சுமார் ஒரு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

யாழ். கோட்டைக்கு அண்மையில் அமைந்திருந்த மேற்படி பயிற்சிப் பாடசாலை கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் கடந்த ஆண்டுவரைபலதடவை இராணுவத் தாக்குதல்களுக்கு உட்பட்டு சேதத்திற்குள்ளாகியதுடன் இக் காலப் பகுதியில் சுமார் இருபது தடவைகள் இங்கிருந்த பல பொருள்கள் திருடப் பட்டிருக்கின்றன. இவ்வாறு ஏற்பட்ட சேத விபரங்களை அண்ணளவாகக் கணக்கிட்டு இப்பாடசாலைக்குமேற்படி தொகை இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் இப்பாடசாலை தற்போது இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. இங்கு கடமையாற்றிய 23 ஊழியர்களில் தற்போது அதிபர் உட்பட நான்கு பேர் மட்டுமே தற்போது எஞ்சி உள்ளனர். ஏனையோர் நாட்டின் ஏனையபகுதிகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். இப் பாடசாலையின் பழைய கட்டடம் தரைமட்டமாக்கப் பட்டதால் தற்போது வசதிகள் அற்ற கட்டடம் ஒன்றிலேயே இதன் அலுவலகம் அமைந்துள்ளது.

இப்பாடசாலையின் ஆவணங்களை சிறந்தமுறையில் பாதுகாக்க முடியாத நிலை தற்போது காணப்படுகின்றது. இதனால் ஆவணங்கள் பல கறையான் மற்றும் மழை நீர் போன்றவற்றால் சேதமடைந்து வருகின்றது. எமது நிருபர் இப்பாடசாலைக்கு சென்ற சமயம் ஊழியர் ஒருவர் நீண்ட நாட்களின்பின் ஆவணகோவைகளில்பற்றியிருந்தகறையானை தட்டிக்கொண்டிருந்தார்.

மேலும் இப்பாடசாலை ஊழியர்களுக்கு கடந்த ஏழு மாதங்களாக சம்பளம் வழங்கப் படவில்லை இதனால் இவர்கள் சிரமமடைந்து வருகின்றனர். (உ)

# 'அவரைத் தாக்கவேண்டாம்'

(டில்லி)

பாரதிய ஜனதாக் கட்சியும், விஸ்வஹிந்து பரிஷித்தும் நடாத்திய பேரணியில், பேச்சாளர்களில் ஒருவர் இந்திய ஜனாதிபதியை தாக்கிப் பேசினார். இந்த நேரம் மேடையில் இருந்த சாமியார் பேச்சாளரிடம்'' ஜனாதிபதி வெங்கட்ராமன் காஞ்சிப் பெரியவரின் பக்தர்; ஒரு நல்ல ஹிந்து ஆகவே அவரைத் தாக்க வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டார். இந்தப் பேரணியில் பேசிய பேச்சாளர்களை கொஞ்சம் அடக்கிப் பேசும்படி செய்ய விழா அமைப்பாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டனர் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பட்டாசு கொளுத்தியதற்கு செல்லச்சாமி கண்டனம்

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதை ஆதரித்து கொழும்பில் பட்டாசு கொளுத்தப்பட்டதைக் கண்டித்து இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கண்டனம் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய செல்லச்சாமி "ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதை வரவேற்று கொழும்பில் சில இடங்களில் பட்டாசு வெடிக்கிறார்கள். இது ஒருவிதமான பயங்கரவாதச் செயலே. இலங்கை இந்திய உறவை சீர்குலைக்கும் செயல் இது. எனவே பாதுகாப்பு அதிகாரிகள் இந்த பயங்கரவாத கோஷ்டியைக் கண்டு பிடிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார்

# மூவரை சுட்டு கொன்றுவிட்டு தற்கொலை செய்த சிப்பாய்

(கொழும்பு)

சகோதரியையும், சகோதரியின் ஒரு வயது மகளையும் சகோதரியின் காதலரின் மனைவியையும் சுட்டுக் கொன்றுவிட்டு தன்னைத் தானே சுட்டுக் கொன்றார் இராணுவச் சிப்பாய் ஒருவர்.

குளியாப்பிட்டியிலுள்ள ஹபலயகம என்ற இடத்தில் மேற்படி சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தற்கொலை செய்து கொண்ட இராணுவச் சிப்பாயின் பெயர் கபில விஜே பண்டார. தனது 17 வயது சகோதரியின் வாழ்க்கையை பாழாக்கியவன் மீது பழி வாங்க அவனது வீடு சென்ற போது அங்கிருந்த அவனது மனைவியையும், பின்னர் வீட்டிற்கு வந்து தனது சகோதரியையும் அவளது ஒரு வயது மகளையும் சுட்டுக்கொன்றார்.

பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தனது உயிரையும் போக்கிக் கொண்டார்.

# பாக். பிரச்சினை தீர்க்க தயாராகவுள்ளது-நவாப்ஷெரிப்

(டில்லி)

காஷ்மீர் பிரச்சினை உட்பட இந்தியாவுடனான சகல பிரச்சினைகளும் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க தமது நாடு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப் புதுடில்லியில் கூறியுள்ளார். இந்தியதொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் இந்திய-பாகிஸ்தான் உறவுகள் சீரடையும் எனத்தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கடிகளையும் தணிப்பதற்கு திடசங்கற்பம் பூண இருநாடுகளும் தயாராக வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

# அங்கவீனர்களுக்கு உதவும்படி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அங்கவீனர்களுக்கான தொழிற் கூடங்களை அமைத்து உதவும்படி அங்கவீனர் புனர்வாழ்வு அமைப்பு வட-கிழக்கு மாகாண சபைப் பிரதம செயலாளரைக் கடிதமூலம் கேட்டுள்ளது. மற்றும் சமுதாய அடிப்படையில் அங்கவீனர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களை அமுல்படுத்தும்படியும் மேற்படி அமைப்புக் கேட்டுள்ளது.

வட-கிழக்கில் 12 சதவீதத்தினர் முழுமையான அல்லது அரை குறையான அங்கவீனர் என்று அங்கவீனர் புனர்வாழ்வு அமைப்பின் தரவுகள் தெரிவிக்கின்றன.

சீதுவ, அம்பிட்டியா, வத்தேகம, காலி ஆகிய இடங்களில் அங்கவீனர்களுக்குப் பாதுகாப்பான தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதென்றும், இதே போன்ற தொழிற்கூடங்களை வடக்கிலும், கிழக்கிலும் அமைத்துத் தரும்படியும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நான்கு தலைப்புகளில் இன்றைய கட்டுரைகள்

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் தமிழ்வள ஆய்வுக் கருத்தரங்குத் தொடரில் இன்றைய நிகழ்வுகளாக நான்கு தலைப்புக்களில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் காலை 9.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் வாசிக்கப்படும்:

புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கா. குபாலன் எழுதிய வடகிழக்கு குடித்தொகைப் பண்புகள், பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் வி. பி. சிவநாதன், பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கெ. சற்குணையா ஆகியோர் இணைந்து எழுதிய மனித வாழ்வும் பண்பாடும், கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் ஆறுமுகம், கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ் சபா ஜெயராஜா ஆகியோர் இணைந்து எழுதிய கல்விவளம் பேராசிரியர் எஸ். பரமேஸ்வரன், கலாநிதி ப. சிவராசா ஆகிய மருத்துவத் துறையைச் சார்ந்தவர்கள் இணைந்து எழுதிய போஷாக்கும், மருத்துவமும் ஆகிய கட்டுரைகளே இன்று வாசிக்கப்படவுள்ள கட்டுரைகளாகும். ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளுமாறு மறுமலர்ச்சிக் கழகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

# தமிழக வன்செயல்களுக்கு பரஸ்பர குற்றச்சாட்டு

(சென்னை)

ராஜீவ் காந்தி மரணமடைந்ததைத் தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்ட வன்முறைகளில் தங்கள் கட்சியினர் தாக்கப்படுவதாக தி.மு.க. கூட்டணியினரும், இந்திராகாங்கிரஸ் அ.தி.மு.க. கூட்டணியினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

தமிழகத்தின்பல்வேறு பகுதிகளில் இந்திரா காங்கிரஸ் அ. தி. மு. கட்சியின் தொண்டர்களையும், அலுவலகங்களையும் தி. மு. க. வினர் தாக்குவதாக கூறி மாஜர் ஒன்றினை தமிழக இந்திராகாங்கிரஸ் பிரதிநிதி தமிழக ஆளுநரிடம் ஒப்படைத்தார்.

அத்தோடு இந்திரா காங்கிரஸ் தொண்டர்களை பொய் வழக்குகளின் பேரில் பொலிசார் கைது செய்வதாகக் கூறி அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்றும் இந்திரா காங்கிரஸ் கேட்டுக் கொண்டது.

இதே நேரம் தி. மு. க. தொண்டர்கள் காரணமின்றி தாக்கப்படுவதாக அக் கட்சி புகார் செய்துள்ளது.

தமிழர்

இதேபோல் முஸ்லிம்கள்சிறுபான்மையினராக இருக்கும் கிராமங்கள் தமிழர் வதியும் கிராமங்களுடன் இணைக்கப்பட்டுத் தமிழரின் பலம்குறைக்கப்படுகிறது.

நாவலடி முஸ்லிம் குடியேற்றத்திட்டம் ஒட்டமாவடியிலிருந்து பிரித்து தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவான வாகரையுடன் இணைக்கப்படுகிறது.

இப்போதைய யுத்தத்துக்குப் பிறகு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பகுதிகள் அம்பாறையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள உ. அ. அதிபர்கள் பிரிவுகளுடன் தமிழர் கிராமங்களை இணைத்துப் பின்னர் அவற்றைப்பொலநறுவமாவட்டத்துடன் இணைக்கும்வேலைகளும் இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் கிழக்கு மாகாணத்தின் பரப்பளவைக் குறைப்பது அரசாங்கத்தின் நோக்கம் ஆகும்.

# அமெரிக்க பிரஜைகளுக்கு இந்தியப் பயணங்களை தவிர்க்கக் கோரிக்கை

(வாஷிங்டன்)

ராஜீவ் காந்தியின் மரணத்தையடுத்துஇந்தியாவில்பலாத்காரம் ஏற்பட்டிருப்பதால் இந்தியாவிற்கு அவசரமற்ற பிரயாணங்களைத் தவிர்க்குமாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் அமெரிக்க மக்களைக் கோரியுள்ளது

குறுகிய நேரத்தில் இந்தியா முழுவதும் பயங்கர ஆர்ப்பாட்டங்களும், வகுப்புக் கலகங்களும் நடைபெறுகின்றன என்பதை இந்தியாவிற்குப் பிரயாணம் செய்யும் அமெரிக்கர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என வெளிநாட்டமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை இந்தியாவில் வசிக்கும் அமெரிக்கர்கள் இயன்றளவில் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு புதுடில்லியிலுள்ள அமெரிக்க தூதரகம் கேட்டுக் கொண்டுள்ளது,

# காங்கிரஸ் செயற் குழு புதன் கூடும்

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் என இ. காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் பிரணாப் முகர்பதி தெரிவித்தார்.

அரச

வதற்கான அரசாங்கத்தின் அனுமதி வழங்கப்படுவது தாமதியுள்ளது எனத் தெரிவித்தார்

அடுத்த மாதம் வரவிருப்பதாகத் தெரிவித்துள்ள மூன்று உறுப்பினர் மன்னிப்புச்சபை குழு மட்டக்களப்பு செல்ல மாத்திரமே அனுமதி கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக

வளவு தொகையினர் அனுமதிக்கப்படுவதாக கல்வி உயர் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# கிராமசேவகர் சங்கப் பொதுக்கூட்டம்

(நல்லூர்)

தமிழ்ப்பேசும் கிராம அலுவலகர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நல்லூர் சாதனா பாடசாலையில் (கல்வித் திணைக்களத்திற்கு அருகாமை) நடைபெறும். அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# மாவீரர் நினைவாக விளையாட்டுப் போட்டி

(முல்லைத்தீவு)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளான 2ஆவது லெப். சுருளி: கிருபா ஆகியோரது முப்பத்தோராம் நினைவு நாளை முன்னிட்டு முள்ளிவாய்க்கால், வற்றாப்பளை ஆகிய இடங்களில் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன, இன்றைய தினம் இவ்விளையாட்டுப்போட்டி வற்றாப்பளையில் நடைபெறும்,

# இறைகுமாரன், உமைகுமாரன் நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

1982ஆம் ஆண்டு புளொட் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இறைகுமாரன், உமைகுமாரன் ஆகியோரின் ஒன்பதாவது நினைவஞ்சலிக் கூட்டம் இன்றுமாலை அளவெட்டி மாவீரர்கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன், மூத்த உறுப்பினர் தேவர் உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர். கவியரங்கமும் இடம்பெறவுள்ளது.

தாயார்

கொண்டுள்ளதாக பிரியங்காவின் சிநேகிதிகள் தெரிவித்ததாக அக்கட்டுரையாசிரியர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஒப்சேவர் பத்திரிகை சோனியா அரசியலில் தலையிட மாட்டார் என்று தெரிவித்துள்ளது. அதற்கு அவர் பிள்ளைகள் அரசியலில் தாய் தலையிடுவதை விரும்பாமையே காரணம் எனத் தெரிவித்துள்ளன.

30 நாட்களுள்

ளுமன்றம் கூடும்போது இந்த யோசனையை தாம் சிறிலங்கா ஜனாதிபதியிடமும், சபாநாயகரிடமும் சமர்ப்பிக்க இருப்பதாக இக்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்;

நரசிம்மராவ்

வரை மத்திய அமைச்சராக பணியாற்றியிருப்பதுடன் இந்திரா காந்தி — ராஜீவ் காந்தி போன்றோருக்கு மிக நெருக்கமானவரும் ஆவார். இந்திரா காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராகவும், பல மாநிலத்தவர்களின் அபிமானத்தைப் பெற்றவராகவும் பி. வி. நரசிம்மராவ் உள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

# இஸ்ரேலுக்கு எதிராக அமெரிக்கா வாக்களிப்பு

(நியூயோர்க்)

இஸ்ரேலின் பிடிவாதப் போக்கினால் ஆத்திரமடைந்திருக்கும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு எதிரான ஐ. நா. தீர்மானம் ஒன்றில் இஸ்ரேலுக்கு எதிராக வாக்களித்துள்ளது. இஸ்ரேலுக்கு எதிராக அமெரிக்க பாதுகாப்புச் சபையில் வாக்களித்தது இதுவே முதல் தடவையாகும்.

இஸ்ரேலியர் ஆக்கிரமித்துள்ள அரபுப் பிரதேசங்களிலிருந்து நான்கு பாலஸ்தீனியர்களை நாட்டைவிட்டு வெளியேற்றிய விடயம் சம்பந்தமாக ஐ நா. பாதுகாப்புச் சபை இஸ்ரேலுக்கு எதிரான கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இத்தீர்மானத்தை ஆதரித்தே அமெரிக்கா வாக்களித்துள்ளது.

நாடு கடத்தப்பட்ட நான்கு பலஸ்தீனியர்களையும் திரும்ப அழைக்க வேண்டும் எனவும் நாடு கடத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஏற்கனவே நாடு கடத்தப்பட்டோர் திருப்பி அழைக்கப்பட வேண்டுமெனவும் ஐ. நா. பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

ஜெனிவா உடன்படிக்கைகளின்படி நாடுகடத்தலை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமெரிக்காவிற்கான ஐ. நா பிரதிநிதி தோமஸ் பிக்கரிங் கூறியுள்ளார் இத்தகைய நடவடிக்கைகள் சமாதானத்திற்கு உதவ மாட்டாது எனவும், நாடுகடத்தப்படுவதை நிறுத்தி வைக்குமாறு அமெரிக்கா இஸ்ரேலைக் கோரியுள்ளதெனவும் அவர் மேலும் கூறினார்.

# ஆர்ப்பாட்டத்தின் போது மாணவி மிதியுண்டு மரணம்

(சியோல்)

தென்கொரிய ஜனாதிபதி வோரட்டே கூ இராஜினாமாச் செய்யவேண்டுமென கோரும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நேற்று மூன்றினமும் தொடர்ந்தது. இருபதுக்கு மேற்பட்ட நகரங்களில் பொலிஸாருக்கும் மாணவருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றன.

தலைநகரில் மாணவி ஒருவர் இந்தஆர்ப்பாட்டங்களில் கொலையுண்டார். ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிவழியே ஓடியபோது மிதிபட்டு அம்மாணவி இறந்ததாக பொலிஸார் கூறியுள்ளனர். ஆர்ப்பாட்டத்தை அடக்க தலைநகரில் 20,000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

# ஜோர்ஜியாவில் ஜனாதிபதித் தேர்தல்

சோவியத் யூனியனின் குடியரசான ஜோர்ஜியாவில்ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்று நடைபெற்றது.

சோவியத் யூனியனின் 73 ஆண்டுகால வரலாற்றில் ஜோர்ஜியா குடியரசிலேயே முதன்முதலாக நேரடி ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறுகின்றது.

ஆறுவேட்பாளர்களில் முக்கிய வேட்பாளராக ஜோர்ஜியா பாராளுமன்ற சபாநாயகர் போட்டியிடுகின்றார்.

# கடலில் மூழ்கி மரணம்

பண்ணைக் கடலில் தவறி விழுந்த இளைஞர் மரணமானார். இவரது சடலம் இதுவரை மீட்கப்படவில்லை. பதினெட்டு வயதுடைய இந்த இளைஞர் தீவுப்பகுதிக்கு ஒருவரை சைக்கிளில் ஏற்றிச் சென்று இறக்கிவிட்டு திரும்பி வரும்போது நேற்றுஅதிகாலை மூன்று மணியளவில் கடலுக்குள் தவறிவிழுந்தார். அவரது சைக்கிள் மட்டுமே இதுவரையில் மீட்கப்பட்டுள்ளது.

# கட்டாய வகுப்புகள்

அரசாங்கப் பாடசாலைகள் அனைத்திலும் மாலைநேர வகுப்புக்கள் கட்டாயமாக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் முதல் அரசாங்க பாடசாலைகளில் மாலைநேர வகுப்புக்கள் கட்டாயமாக்கப்படும் என்றும் இதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரசிற்கு

எனது பெயரை முன்மொழிந்தவர்களுக்கு நன்றி. ஆனால் கட்சிக்கு கூட்டுத் தலைமையே தேவை என்றார்.

நேரு குடும்பத்தவர் அல்லாத ஒருவர் பதவி ஏற்றால் கட்சி பலவீனப்பட்டுவிடும் என்று அஞ்சுகிறீர்களா என்ற மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த அவர்,

அப்படி அஞ்சவில்லை. ஆனால் கூட்டாகப் பலர் பொறுப்பேற்கும்போது கட்சிக்கு மேலும் பலம் சேரும் என்றார்.

## மரண அறிவித்தல்

### சண்முகநாதன் ஜெயலட்சுமி

சண்முகநாதன் ஜெயலட்சுமி காலமானார்; இவர் காலம் சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும், வாசுதேவன் (அவுஸ்திரேலியா), வனஜா, சாந்தி, விமலா, சிவானந்தன், சந்திரபாசன் (சுவீடன்), ஜமுனா, ராஜ்குமார் (இந்தியா), ஸ்கந்தகுமார், சுரேந்திரா (ஈழநாதம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாரதாதேவி, முத்துக்குமார் (சவுதி). கோவிந்தராஜன், மகேசபாலன். ஜெயந்தி, மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் கலைமகள், றோஜாநிர்மலா, கோகுலவர்த்தன், கிருபாகரன். நவீனன், மானஸி, மேகலா, சித்துபைரவி, கஸ்தூரி, மயூரன், சஞ்சீவன், சாருகேசன், காளனி, வேணுஷா ஆகியோரின் அன்புப் பேத்தியும் சண்முகவடிவேல் (லண்டன்), இராஜபரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை 3 மணி அளவில் 187/7, இன்னர் லேனில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவருக்கும் அறியத்தருகிறோம், தகவல்

(R.1413) சிவா

[இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது]